Ocean Justice


GREENPEACE



கடல்சார் நீதியும் சமூக அதிகாரமும் : மீனவச் சமூகத்தின் கலைச்சொற்கள்



இந்தக் கையேடு, இதில் பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய சொற்களை விளக்குகிறது.



- **கடல்சார் பாதுகாப்பு** (Ocean conservation)
- **மீன்வளம்** (Fisheries)
- **காலநிலைமாற்றம்** (Climate Change)
- **உயிர்ப்பல்வகைமை** (Biodiversity)
- **சமூக உரிமை** (Community rights)
- **கரையோர நிர்வாகம்** (Coastal governance)


தொடர்ச்சி

தமது கடல், நிலம், வாழ்வாதாரங்கள் மற்றும் எதிர்காலத்தைப் பாதிக்கும் முடிவுகளைப் பொதுமக்கள் புரிந்துகொள்ள உதவுவதே இதன் நோக்கமாகும்.

GREENPEACE

காலநிலைமாற்றம் மற்றும் கடல்சார் நீதி (Climate Change and Ocean Justice):

காலநிலை மாற்றத்தினால் சமுத்திரம் வெப்பத்தையும் கார்பனீரொட்சைட்டையும் அகத்துறிஞ்சி மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகி வருகிறது. இருப்பினும், கடல் அமிலமயமாகுதல், கடல் மட்ட உயர்வு மற்றும் கடல் நீரோட்ட மாற்றங்கள் ஆகியவற்றின் தாக்கங்கள் அனைத்து இடங்களிலும் சமமாக ஏற்படுவதில்லை. ஆயினும் வளர்ந்துவரும் நாடுகளும் சிறியதீவாக அமைந்த நாடுகளும் பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்திற்கு மிகக் குறைந்த அளவே பங்களிக்கின்ற போதிலும் ஒப்பீட்டளவில் அதிகளவில் பாதிப்புறுவன கரையோரங்களாகவே உள்ளன. இது, பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்களால் பாதிப்புறுதலில் உள்ள அநீதியை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அதோடு பருவநிலைசார் நீதியானது கடல்சார் நீதியோடு பிணைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இது உணர்த்துகிறது.







கடல்சார் நீதி (Ocean Justice):

கடல்சார் நீதி என்பது, கடல் வளங்களிலிருந்து பெறப்படும் நன்மைகளும், கடல் பாதுகாப்பில் ஏற்படும் சுமைகளும் நியாயமான மற்றும் சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதைக் குறிப்பதாகும். இது சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமூக சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைவாக அமைவதுடன், கடல் மாசுபாடு, அதிகளவிலான மீன்பிடி மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றால் அதிகளவில் சவாலுக்கு உட்படும் கடற்கரைச் சமூகங்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகப் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

வள சமத்துவம் (Resource Equity):

மீன்வளம், தாதுக்கள் மற்றும் கடல் வளங்களிலிருந்து கிடைக்கக்கூடிய சாத்தியமான நன்மைகள், கடல்சார் அபாயங்கள் மற்றும் கடல் வளங்கள் சார்பான வாய்ப்புகள் போன்றவை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதை வலியுறுத்துகிறது.

GREENPEACE

நிறுவனப் பொறுப்புக்கூறல் (Corporate Accountability):

முடிவெடுப்பவர்கள் தங்கள் செயற்பாடுகளை நியாயப்படுத்தவும், அதன் விளைவுகளை எதிர்கொள்ளவும் கடமைப்பட்டுள்ளனர். கப்பல் போக்குவரத்து மற்றும் எரியூட்டி முதல் மீன்பிடிப்பு மற்றும் சுற்றுலா ஆகிய பெருங்கடல் சார்ந்த தொழில்துறைகளில் பன்னாட்டு நிறுவனங்கள் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன.

நிலம், வாழ்வாதாரம் மற்றும் வாழ்வதற்கான உரிமை (Right to Land, Livelihood and Life):

சமூகங்கள் தங்களின் பாரம்பரியக் கரையோரப் பகுதிகளில் தொடர்ந்து வாழ்வதற்கும், மீன்பிடிப்பதற்கும், வேலை செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பாக உயிர்வாழ்வதற்கும் உரிமை கொண்டுள்ளன.



ஆலோசனை எதிர் ஒப்புதல் (Consultation vs Consent):

முடிவுகளை எடுப்பதற்கு முன்பு, அதிகாரிகள் அல்லது அமைப்புகள் உங்களுடைய கருத்துக்களைக் கேட்பதாகும். சில நேரங்களில், கலந்தாலோசித்தல் நடக்கும் ஆனால் எடுக்கப்பட்ட முடிவுகளில் எந்த மாற்றமும் இருக்காது. இன்னும் சில நேரங்களில், முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கும்; அங்கு கலந்தாலோசித்தல் என்பது சமூகத்திற்குத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக மட்டுமே நடக்கும்.

உண்மையான ஒப்புதல் என்பது பாரம்பரிய நடைமுறைகளின் மூலமாக வழங்கப்படும் முறையான அங்கீகாரத்தைக் கோருகிறது. மிக முக்கியமாக, ஒப்புதல் என்பது தொடர்ச்சியான ஒரு ஒப்பந்தத்தைப் போன்றதாகும்; அதாவது திட்டத்தை உருவாக்குபவர் கடல்சார் எல்லைகளை மீறினாலோ அல்லது எண்ணெய்க் கசிவை ஏற்படுத்தினாலோ, வழங்கிய ஒப்புதலைத் திரும்பப் பெறும் உரிமை சமூகத்திற்கு உண்டு.

தங்கள் நிலம், கடல் அல்லது வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் பாதுகாப்புவட்டக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்ற முடிவுகளை ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ தங்களுக்கு இருக்கும் அதிகாரத்தை உறுதி செய்யும் பொருட்டு, ஆரம்பக் கட்டத்திலேயே முறையான விபரங்களைப் பெறுவதற்கும் கலந்தாலோசனைக்கு உட்படுத்தப்படுவதற்கும் சமூகங்களுக்கு முழுமையான உரிமை உண்டு.





GREENPEACE

சுயாதீனமான , முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட மற்றும் அறியப்பட்ட ஒப்புதல் (FPIC)



பழங்குடி மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் உரிமைகள், பாரம்பரிய அறிவு மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கும் பொருட்டு எழுத்துப்பூர்வமான ஒப்புதல் செயல்முறைகள், சமூகப் பொதுக்குழு கூட்டங்கள் (சபைகள்), ஆவணப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் வழங்கிய ஒப்புதலைத் திரும்பப் பெறும் உரிமை ஆகியவற்றின் மூலமாகவே FPIC நடைமுறையில் செயல்படுத்தப்படுகிறது.

சமூகங்களுக்கு வெறும் தகவல்கள் மட்டுமே வழங்கப்படுவதல்லாது, மாறாக அவர்களே முடிவெடுக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு என்பதாகும். சுருக்கமாகச் சொன்னால், உள்ளூர் சமூகங்களின் உடன்பாடு இல்லாமல் அவர்களது பகுதியில் எந்த ஒரு திட்டம் அல்லது செயல்பாடோ நடக்கக்கூடாது.

* சுயாதீனமான (Free) → கட்டாயப்படுத்துதலோ அல்லது அழுத்தங்களோ இல்லாதது

* முன்கூட்டியே (Prior) → முடிவுகள் எடுக்கப்படுவதற்கு முன்பே

* அறிவிக்கப்பட்ட (Informed) → முழுமையான, எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய தகவல்கள்

* ஒப்புதல் (Consent) → ஆம் என்று கூற, இல்லை என்று மறுக்க அல்லது பேச்சுவார்த்தை நடத்த உள்ள உரிமை

பங்கேற்பு (Participation):
CBD இன் கோட்பாடுகளின்படி, பங்கேற்பு என்பது சமுத்திரம், நிலம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த முடிவுகளில் சமூகங்கள் உண்மையான முறையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதாகும்; மாறாக அவை தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்ட பிறகு அவர்களுக்குத் தகவல் தெரிவிப்பது மட்டும் பங்கேற்பு ஆகாது. இதன் பொருள் யாதெனில் சமூகங்கள் குறித்த பங்கேற்புகளின் போது தாராளமாகப் பேசுதல் மற்றும் அவர்களின் குரல் கேட்கப்படுதல் வேண்டும். அவர்களின் கருத்துக்கள் எடுக்கப்படும் முடிவுகளை மாற்றியமைக்கக் கூடும். மேலும் அவர்கள் திட்டமிடலின் ஆரம்பத்திலிருந்தே அதன் ஒரு பகுதியாக இருப்பார்கள்.

உண்மையான பங்கேற்பு (Real participation) = உங்களது குரல் மதிக்கப்படுவதுடன், முடிவுகளில் செல்வாக்கு செலுத்த அல்லது அவற்றை மாற்றியமைக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டிருப்பதாகும். .

போலியான பங்கேற்பு (Fake participation) = முடிவுகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருப்பதுடன், அதன் பின்னர் உங்களுக்கு அது குறித்துத் தகவல் தெரிவிக்கப்படுவது மட்டுமே ஆகும்.

நிர்வாகம் மற்றும் சூழலமைப்பு (Governance & Ecosystem)

நிலைபேறான மீன்பிடி (Sustainable Fishing):
எதிர்கால மீன் வளத்தையோ அல்லது கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்பையோ அழிக்காத வகையில் மீன்களைப் பிடிப்பதாகும். இவற்றில்; அளவிற்கு அதிகமாக மீன்பிடிக்காமல் இருப்பது, மீன்கள் இனப்பெருக்கம் செய்ய அனுமதிப்பது, தீங்கு விளைவிக்கும் மீன்பிடி உபகரணங்களைத் தவிர்ப்பது மற்றும் மீன் இனப்பெருக்கப் பகுதிகளைப் பாதுகாப்பது ஆகியவை அடங்கும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு (Conservation):
எதிர்காலச் சந்ததியினருக்கு நிலைத்திருக்கும் வகையில் இயற்கையைக் கவனமாகப் பயன்படுத்தி, அதைப் பாதுகாப்பதாகும். இது மீன்களின் வாழிடங்களைப் பாதுகாத்தல், கண்டல் காடுகள் மற்றும் முருகைக்கற்பாறைகளைப் பாதுகாத்தலும் மீள் உருவாக்கலும், மாசுபாட்டைக் குறைத்தல் மற்றும் வளங்களைப் பொறுப்புடன் நிர்வகித்தல் ஆகியவற்றை ஆதரிக்கிறது.


கூட்டு முகாமை / இணைந்த முகாமை (Co-management):
இயற்கை வளங்களை அரசாங்கமும் உள்ளூர் சமூகங்களும் இணைந்து, கூட்டுப் பொறுப்புடன் நிர்வகிக்கும் ஒரு முறையாகும்.

சமூகத்தின் முன்னெடுப்புடனான பாதுகாப்பு (Community-led Conservation):
இது உள்ளூர் சமூகங்களால் திட்டமிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு, அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் நிர்வகிக்கப்படும் இயற்கைப் பாதுகாப்பு முயற்சிகள் அல்லது திட்டங்களாகும்.

பாரம்பரிய அறிவு (Traditional/ Local Knowledge):
இது சுற்றுச்சூழல், சூழலியல் மற்றும் இயற்கை வளங்களின் பயன்பாடு குறித்து, உள்ளூர் சமூகங்களால் தலைமுறை தலைமுறையாகக் கட்டியெழுப்பப்பட்டுப் பேணப்பட்டு வரும் அறிவு முறைகளாகும்.

ஆட்சி முறை (Governance):
இது இயற்கை வளங்களின் மீதான அதிகாரம் மற்றும் முடிவெடுத்தலுக்கான ஒட்டுமொத்த அமைப்புகளையும் செயல்முறைகளையும் குறிப்பதாகும்.





கண்காணிப்பு (Monitoring):

எதிர்கால சவால்களில் இருந்து பாதுகாக்கவும் அவற்றை முன்கூட்டியே கணிக்கவும், அத்துடன் திட்டங்களின் வெற்றிகரமான செயல்பாட்டைக் காலப்போக்கில் மதிப்பிடவும் ஏதுவாக, சுற்றுச்சூழல் அல்லது சமூக நிலைமைகளைத் தொடர்ச்சியாகவும் திட்டமிட்டபடியும் கண்காணித்துத் தரவுகளைப் பதிவுசெய்யும் ஒரு செயல்முறையாகும்.

அமுலாக்கம் (Enforcement):

வகுக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்காக, அவற்றை நடைமுறைப்படுத்தும் செயல்பாடாகும்.

பங்குதாரர்கள் மற்றும் உரிமைதாரர்கள் (Stakeholders vs Rights Holders):

- **பங்குதாரர்கள் (Stakeholders):**

ஒரு குறிப்பிட்ட முடிவினால் பாதிக்கப்படக்கூடிய அல்லது அதில் அக்கறை கொண்டுள்ள தனிநபர்கள் அல்லது குழுக்கள்

- **உரிமைதாரர்கள் (Rights Holders):**

சட்டப்பூர்வமான அல்லது பாரம்பரியமிக்க மரபுவழி உரிமைகளைக் கொண்டுள்ள மக்களைக் குறிக்கும். (இதற்கு உதாரணமாக, பழங்குடி மக்கள் மற்றும் தொன்றுதொட்டு அங்கு வாழும் கடலோரச் சமூகங்களைக் குறிப்பிடலாம்.)





கடலரிப்பு (Coastal Erosion)

அலைகள், கடல் நீரோட்டங்கள், சுழல்கள் மற்றும் புயல்கள் போன்றவற்றின் தொடர்ச்சியான தாக்கத்தால் கடற்கரையோர நிலப்பகுதி படிப்படியாக அரிக்கப்பட்டு அழியும் செயல்முறையாகும். காலப்போக்கில், கடல் மெல்ல மெல்ல நிலப்பகுதிக்குள் ஊடுருவி, ஒரு காலத்தில் உலர்ந்த நிலமாக இருந்த பகுதிகள் கடலின் ஒரு பகுதியாக மாறுவதுடன் அல்லது நிரந்தரமாகச் சேதமடைகின்றன.



- **இயற்கைக் காரணங்கள்** : வலுவான அலைகள் மற்றும் புயல்கள், பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் கடல் மட்ட உயர்வு, அலைபெருக்கு மற்றும் கடல் நீரோட்டங்களின் தொடர்ச்சியான இயக்கம்.
- **மனிதக் காரணங்கள்** : கடற்கரைகள் மற்றும் ஆறுகளில் இருந்து மணல் அகழ்தல், கண்டல் காடுகள் மற்றும் கடற்புல் படுக்கைகள் போன்ற பாதுகாப்புச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் அழிப்பு, ஹோட்டல்கள், வீதிகள் மற்றும் துறைமுகங்கள் உள்ளிட்ட திட்டமிடப்படாத கடலோர அபிவிருத்திகள், கடற்கரையை ஒட்டிய மணலின் இயற்கையான இயக்கத்தைச் சீர்குலைக்கும் கட்டமைப்புகள்.
- **தரைமட்டத்தில் காணப்படும் நேரடிப் பாதிப்பு அறிகுறிகள்** : சுருங்கிவரும் கடற்கரைகள், கடற்கரைக்கு அருகில் உள்ள நிலப்பகுதியில் விரிசல் ஏற்படுதல் அல்லது நிலச்சரிவு ஏற்படுதல், தென்னை மரங்கள் மற்றும் இதர தாவரங்கள் கடலுக்குள் சரிந்து விழுதல், கடற்கரைக்கு மிக அருகில் கடல் ஆழம் அதிகரித்தல், வீடுகள், வீதிகள் மற்றும் விவசாய நிலங்கள் கடலுக்குள் மூழ்கி அழிதல்.
- **இது ஏன் முக்கியமானது ?** கடலரிப்பானது கடலோரச் சமூகங்களின் பாதுகாப்பு, வீடுகள் மற்றும் வாழ்வாதாரங்களுக்கு நேரடி அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இது மீன்பிடி இறங்குதளங்களை இழக்க நேரிட வழிவகுக்கலாம், நன்னீர் கிணறுகள் கடல்நீரால் உவர்ப்படைவதற்குக் காரணமாகலாம், சுற்றுலாத்துறையைப் பாதிப்பதுடன் முக்கிய கடலோரச் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பலவீனப்படுத்தலாம். அவையே கடலோரப் பகுதிகளுக்குப் பாதுகாப்பை வழங்குவதோடு உள்ளூர் வாழ்வாதாரங்களுக்கும் ஆதரவளிக்கின்றன



இலங்கையிலுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் வகைப்பாடு (Protected Area Categories in Sri Lanka)


பாதுகாக்கப்பட்ட பகுதிகள் (Protected Areas): இவை சுற்றுச்சூழல் அமைப்புகளையும் வனவிலங்குகளையும் பாதுகாப்பதற்காக, சிறப்பு விதிகளின் கீழ் நிர்வகிக்கப்படும் புவியியல் ரீதியான நிலம் அல்லது கடல்சார் மண்டலங்களாகும். இவை மீன்பிடித்தலைக் கட்டுப்படுத்துதல், புதிய கட்டுமானங்கள்/அபிவிருத்திப் பணிகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல் மற்றும் உயிரினங்களின் வாழிடங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றைச் செய்கின்றன.

கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளும் நீதியும் (Marine Protected Areas): கடல்சார் உயிர்ப் பல்வகைமையையும் சுற்றுச்சூழல் அமைப்புகளையும் பாதுகாப்பதற்காகச் சட்டப்பூர்வமாக நிர்வகிக்கப்படும் ஒரு கடல் பகுதியாகும். இங்கு கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு மனித செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்படும். ஆனால், இங்கு "நீதி" என்பது: கடலோரச் சமூகங்கள் அவர்களின் இடங்களில் இருந்து அநீதியான முறையில் வெளியேற்றப்படக் கூடாது, மீனவர்களுடன் முறையான கலந்தாலோசனை நடத்தப்பட வேண்டும், அவர்களின் வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், திட்டங்களில் இருந்து பெறப்படும் பயன்கள் நியாயமான முறையில் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும்.

ரம்சார் சதுப்புநிலங்கள் (Ramsar Wetlands): ஆறுகள் முதல் முருகைக்கற்பாறைகள் வரை இயற்கையான மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பல்வேறு வகையான வாழிடங்கள் சதுப்புநிலங்களாக வகைப்படுத்தப்படலாம். சதுப்புநிலங்களில் தாழ்நிலச் சதுப்புநிலங்கள், களிமண் சதுப்புநிலங்கள், வறண்ட கால நீர்நிலைகள், ஏரிகள், உவர்ச் சதுப்புநிலங்கள், சேற்றுப் பரப்புகள், கண்டல் காடுகள், பவளப்பாறைகள், நீரூற்றுப் புல்வெளிகள், கரிநிலப் புதைகுழிகள் அல்லது நீர்நிலைகள் என இயற்கையான அல்லது செயற்கையான, நிரந்தரமான அல்லது தற்காலிகமான அனைத்தும் அடங்கும்.இப்பகுதிகளுக்குள் இருக்கும் நீர் தேங்கிய நீராகவோ அல்லது ஓடக்கூடிய நீராகவோ மற்றும் நன்னீர், உவர்நீர் அல்லது உப்புநீர் என எதுவாகவும் இருக்கலாம்; மேலும் நீர் வற்றி இருக்கும் போது ஆறு மீட்டர் ஆழம் வரையிலான ஆறுகள், கடற்கரை அல்லது கடல்சார் நீர்ப்பகுதிகளும் இதில் அடங்கும். நிலத்தடிச் சதுப்புநிலங்கள் கூட இதில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கடுமையான இயற்கை பாதுகாப்பிடங்கள் (Strict Nature Reserves-SNR): விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புப் கட்டளையின்கீழ் மூன்று (03) கடுமையான இயற்கைக்காப்பகங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (ஹக்கலை, யாலா மற்றும் ரித்திகலை). இப்பகுதிகளின் பாதுகாப்பு மதிப்புகளை உறுதிசெய்வதற்காக, மனிதர்களின் வருகை, பயன்பாடு மற்றும் அவற்றின் தாக்கங்கள் ஆகியவை இங்கு மிகக் கடுமையான கட்டுப்பாட்டு வரம்பிற்குள் வைக்கப்பட்டுள்ளன. மனிதத் தாக்கங்களால் வெளிப்படுகிறதில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிப்பதற்கான ஒப்பீட்டுப் பகுதிகளாக இவை விளங்குவதோடு, குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு மட்டுமே உரிய உள்நாட்டுத் தாவரங்கள் மற்றும் உயிரினங்களுக்கான தனித்துவமான வாழிடங்களையும் இவை உருவாக்குகின்றன. பாதுகாக்கப்பட்ட இயற்கை வாழிடங்களுக்குள் நுழைவது தடைசெய்யப்பட்டது ஆயினும், உத்தியோகபூர்வ கடமைகளுக்காகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கோ இது தடையாக இருக்காது. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் இந்த இரண்டு நோக்கங்களுக்காகவும் இங்கு செல்ல முடியும்.





விசேட முகாமைத்துவத்துக்குரிய பகுதிகள் (Special Management Areas-SMA):

இவை மிகவும் உணர்திறன் மிக்க முக்கியமான பிரதேசங்கள் என்பதால், கூடுதல் கவனிப்பும் சிறப்பு விதிகளும் தேவைப்படும் பிரதேசங்களாகும். இவை முழுமையாகத் தடை செய்யப்பட்ட பகுதிகள் அல்ல. இருப்பினும், இங்கு மீன்பிடித்தல் கட்டுப்படுத்தப்படலாம், கட்டுமானங்கள்/அபிவிருத்திச் செயல்பாடுகள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்படுவதுடன் பாதுகாப்பு விதிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

தேசிய பூங்காக்கள் (National Parks):

பார்வையாளர்களுக்கு விஞ்ஞான, கல்வி, பொழுதுபோக்கு மற்றும் அழகியல் ரீதியான வாய்ப்புகளை வழங்கும் வகையில் இருபத்தைந்து (25) தேசிய பூங்காக்கள் நாடு முழுவதும் பரவிக் காணப்படுகின்றன. இப்பகுதிகள் விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக, அதற்கான கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டே பார்வையாளர்கள் தேசிய பூங்காவிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.

கடல்சார் தேசிய பூங்காக்கள் (Marine National Parks):

விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளையின் கீழ் பிரகடனப்படுத்தப்படும் ஒரு கடல்சார் தேசிய பூங்காவின் சட்ட விதிகளானது, சாதாரண தேசிய பூங்காவின் விதிகளுக்கு முற்றிலும் ஒப்பானதாகும். விலங்குகள் மற்றும் தாவரங்களை அவதானிப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் மட்டுமே பார்வையாளர்கள் கடல்சார் தேசிய பூங்காக்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். இருப்பினும், இந்த கடல்சார் தேசிய பூங்கா உருவாக்கப்படுவதற்கு முன்னரே சட்டம், வழக்காறு அல்லது மரபு அல்லது பாரம்பரிய நடைமுறைகளின்படி அங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த எந்தவொரு செயல்பாடும், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படும். விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் விதிகளின் கீழ் இலங்கையின் முதலாவது கடல்சார் தேசிய பூங்காவாக ஆதாம் பாலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

கடல்சார் காப்பகங்கள் (Marine Reserves):

கடல்சார் காப்பகங்கள் என்பது ஒரு வகையான கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். எனினும், விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் விதிகளின் கீழ் இதுவரைக்கும் எந்தவொரு பகுதியும் இவ்வாறு பிரகடனப்படுத்தப்படவில்லை.



தாங்குதிறன் வலயங்கள் / காப்பு வலயங்கள் (Buffer zone):

தாங்குதிறன் வலயம் என்பது அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதோடு, அது தேசிய பூங்காவின் வெளி எல்லையிலிருந்து நீட்டிக்கப்பட்டதாக அமையும். இது தேசிய பூங்காவிற்குச் சிறந்த பாதுகாப்பை வழங்குவதுடன், மனிதர்களின் தாக்கங்களையும் குறைக்கிறது. இதுவரைக்கும் எந்தவொரு காப்பு வலயங்களும் அதிகாரப்பூர்வமாக பிரகடனப்படுத்தப்படவில்லை. இருப்பினும், விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளையின் பிரிவு 9A-இன்படி, தேசிய பூங்காக்கள் மீதான மனிதர்களின் ஆதிக்கம்/தாக்கங்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மீன்பிடி முகாமைப் பகுதிகள் (Fisheries Management Areas-FMA):

மீன் வளங்கள் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கும், கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகள் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்வதற்கும், சிறப்பு விதிகளின் கீழ் மீன்பிடி நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படும் குறிப்பிட்ட கடல் அல்லது கடற்கரை நீர்ப்பகுதிகளாகும். இயற்கைப் பாதுகாப்பையும், அதேவேளையில் மீன்பிடிச் சமூகங்களின் நீண்டகால வாழ்வாதாரங்களையும் பாதுகாக்கும் வகையிலேயே மீன்பிடி நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும் வகையில் இப்பகுதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.



மீன்பிடி முகாமைப் பகுதிகளில், அதிகாரிகள் பின்வரும் விதிமுறைகளை அறிமுகப்படுத்தலாம்:

- பிடிக்கப்படும் மீன்களின் அளவைக் கட்டுப்படுத்தி வைத்தல்
- மீன்பிடிப் பருவக் காலங்களை (அனுமதிக்கப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட காலங்கள்) நிர்ணயித்தல்
- ஆபத்தான மீன்பிடி வலைகள் அல்லது மீன்பிடி முறைகள் போன்ற தீங்கு விளைவிக்கும் மீன்பிடி உபகரணங்களைக் கட்டுப்படுத்துதல்
- மீன்கள் வளர்வதற்கும் இனப்பெருக்கம் செய்வதற்கும் உகந்த இடங்களைப் பாதுகாத்தல்
- சட்டவிரோதமான அல்லது பதிவு செய்யப்படாத மீன்பிடி நடவடிக்கைகளைக் கண்காணித்தல்

இதன் நோக்கம் மீன்பிடித்தலை முழுமையாகத் தடுப்பது அல்ல, மாறாக எதிர்காலத்திலும் மீன் வளம் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மீன்பிடித் தொழிலை ஒரு நிலையான வாழ்வாதாரமாக மாற்றுவதே ஆகும்.

ஏனைய பயனுள்ள பகுதி-அடிப்படையிலான பாதுகாப்பு நடைமுறைகள் (Other Effective Area-Based Conservation Measures-OECM):

இவை பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே உயிர் பல்வகைமையைப் பாதுகாக்கும் பகுதிகளாகும்.



சர்வதேச மாநாடுகள் மற்றும் கட்டமைப்புகள் (International Conventions & Frameworks)



உயிரியல் பல்வகைமை மாநாடு (The Convention of Biological Diversity-CBD):

இயற்கை மற்றும் உயிர் பல்வகைமையை பாதுகாப்பதற்காக நாடுகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட ஒரு உலகளாவிய ஒப்பந்தமாகும். இது 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற புவி உச்சிமாநாட்டின் போது உருவாக்கப்பட்டது. இலங்கை உட்பட உலகின் பெரும்பாலான நாடுகள் இந்த உடன்படிக்கையில் உறுப்பினர்களாக உள்ளன.

தேசிய உயிரியல் பல்வகைமை மூலோபாயங்கள் மற்றும் செயல் திட்டம் (National Biodiversity Strategies and Action Plan-NBSAP):

ஒரு நாடு தனக்கென உருவாக்கும் தேசிய அளவிலான உயிரியல் பல்வகைமை பாதுகாப்புத் திட்டமாகும். ஒவ்வொரு நாடும் தன் நாட்டின்உயிரியல் பல்வகைமைகளைப் பாதுகாப்பதற்கும், சீதமடைந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதற்கும், இயற்கை வளங்களைச் சீரான முறையில் நிர்வகிப்பதற்கும், அதே வேளையில் உலகளாவிய உயிரியல் பல்வகைமை இலக்குகளை அடைவதற்கும் ஏதுவாக இந்த பிரத்தியேகத் திட்டத்தை வடிவமைக்கின்றது. இத்திட்டமானது பாதுகாக்கப்பட்ட பகுதிகளை முகாமை செய்தல், கண்டல் காடுகளை மறுசீரமைப்பு செய்தல், கடல்வளப் பாதுகாப்பு, மீன்பிடி முகாமை, காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தங்களை மாற்றியமைத்துக் கொள்ளுதல், அச்சுறுத்தலுக்குள்ளான உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் உள்ளூர் சமூகங்களின் பங்களிப்பு போன்ற பல முக்கிய செயல்பாடுகளைத் தன்னுள் உள்ளடக்கியுள்ளது.
இந்த அறிக்கை அரசாங்கத்தின் கொள்கைகள், நிதியுதவிகள், பாதுகாப்புத் திட்டங்கள், சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும், NBSAP உள்ளூர் மக்களின் மீன்பிடி உரிமைகள், கடற்கரைக்கான அணுகல், சுற்றுலாத் திட்டங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான கட்டுப்பாடுகள் மற்றும் புதிய வாழ்வாதார வாய்ப்புகள் போன்ற வாழ்வியல் சார்ந்த அம்சங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாகும்.



தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (National Determined Contribution-NDC):

பாரிஸ் உடன்படிக்கையின் கீழ் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக நாடுகள் வழங்கும் காலநிலை செயல்பாட்டுச்சார்பு அர்ப்பணிப்புகளாகும். இதில் ஒவ்வொரு நாடும்: தான் எவ்வாறு காலநிலை மாசைக் குறைக்கும், பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப தன்னை எவ்வாறு மாற்றியமைத்துக் கொள்ளும், மற்றும் பருவநிலை மாற்றத்தின் மோசமான பாதிப்புகளில் இருந்து தன் நாட்டு மக்களை எவ்வாறு பாதுகாக்கும் என்பதைத் தெளிவாக விளக்குகின்றது.
இந்த அர்ப்பணிப்புகள் நாட்டின் வளர்ச்சி முன்னுரிமைகள், பருவநிலைசார் நிதியுதவிகள், எரிசக்திக் கொள்கைகள், பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் சர்வதேச ஆதரவு ஆகியவற்றிற்கு ஒரு திட்டவட்டமான வடிவத்தை வழங்குகின்றன. தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட இத்தகைய பங்களிப்புகள், நிலம், சமுத்திரங்கள், காடுகள் மற்றும் வாழ்வாதாரங்கள் எவ்வாறு நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துவதால், இவை கடலோரச் சமூகங்கள், மீன்பிடித் தொழில் மற்றும் உள்ளூர் இயற்கை வளங்களின் பயன்பாடு ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கவல்லவை. இதன் காரணமாகவே, கொள்கை உருவாக்கத்தில் உள்ளூர் சமூகங்களின் உண்மையான பங்கேற்பு மிகவும் அவசியமாகிறது; ஏனெனில், பருவநிலை மாற்றத்தினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் மக்களுக்கு, அதற்கான தீர்வுகளை வடிவமைப்பதிலும் தங்களின் குரலை ஒலிப்பதற்கான முழு உரிமை இருக்க வேண்டும்.



குன்மிங்-மொன்றியால் உலகளாவிய உயிரியல் பல்வகைமை கட்டமைப்பு (Kunming-Montreal Global Biodiversity Framework - KMGBF) :
உயிரியல் பல்வகைமைக்கான மாநாட்டின் (CBD) கீழ் கடந்த 2022 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உலகளாவிய பல்வகைமைச் செயல்பாட்டுத் திட்டமாகும். இது 2030 ஆம் ஆண்டிற்குள் பல்லுயிர் பெருக்கத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து நாடுகளுக்கு வழிகாட்டுகிறது. இந்த உலகளாவிய கட்டமைப்பானது சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழல் மாசைக் குறைத்தல், சேதமடைந்த இயற்கைச் சூழலை மீட்டெடுத்தல், பழங்குடி மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பை மேம்படுத்துதல் போன்ற 23 உலகளாவிய பல்லுயிர் இலக்குகளை உள்ளடக்கி, அவற்றை அடைவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

30-க்கு-30 இலக்குகள் (30-by-30 Targets) :

2030 ஆம் ஆண்டிற்குள் பூமியின் 30% நிலப்பரப்பையும், 30% கடல் பரப்பையும் பாதுகாக்கும் ஒரு உலகளாவிய இலக்காகும். இந்த இலக்கானது KMGBF (குன்மிங்-மொன்றியால் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பு) வரைபிலிருந்து பெறப்பட்டதாகும். பல்லுயிர் பெருக்க இழப்பைத் தடுப்பதற்கும், சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும், சமுத்திரங்களையும் காடுகளையும் மீட்டெடுப்பதற்கும், மற்றும் பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கும் அரசாங்கங்கள் வழங்க வேண்டிய ஆதரவை இது வலியுறுத்துகிறது.

பிராந்திய மீன்பிடி முகாமை அமைப்பு (Regional Fisheries Management Organization-RFMO):

எல்லைகளைக் கடந்து இடம்பெயரக்கூடிய மீன் வளங்களை முறைப்படி நிர்வகிப்பதற்காகப் பல்வேறு நாடுகள் ஒன்றிணைந்து செயல்படும் ஒரு சர்வதேச அமைப்பாகும். இவ்வமைப்புகள் கடல் மீன்பிடித்தலை ஒழுங்குபடுத்தவும், மீன்பிடி அளவுகளை நிர்ணயிக்கவும், மீன் இனங்களின் எண்ணிக்கையைப் பாதுகாக்கவும் மற்றும் சட்டவிரோத மீன்பிடித்தலைக் கண்காணிக்கவும் உதவுகின்றன.

உள்ளூர் சமூகத்தால் நிர்வகிக்கப்படும் கடல் பகுதி (Locally Managed Marine Area - LMMA):
முதன்மையாக அந்தந்தப் பகுதி வாழ் உள்ளூர் சமூகங்களால் நிர்வகிக்கப்படும் ஒரு கடல்சார் வலயமாகும். இப்பகுதிகளில், மீன்பிடித்தல், இயற்கை வளப் பாதுகாப்பு, குறிப்பிட்ட காலத்திற்கான மீன்பிடித் தடைகள் மற்றும் கடல் வளப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான விதிகளை உள்ளூர் மக்களே உருவாக்குகின்றனர். இந்த முறையானது உள்ளூர் பாரம்பரிய அறிவு, சமூகத் தலைமைத்துவம் மற்றும் உள்ளூர் மக்களின் பாதுகாப்புப் பொறுப்புணர்வு ஆகியவற்றை அங்கீகரித்து ஊக்குவிக்கிறது.

தேசிய சுற்றுச்சூழல் செயல்பாட்டுத் திட்டம் (National Environmental Action Plan-NEAP):
ஒரு நாட்டின் முதன்மையான சுற்றுச்சூழல் முன்னுரிமைகள், எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் திட்டவட்டமான செயல்பாடுகளை விவரிக்கும் ஒரு தேசிய ஆவணமாகும். இதில் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு, பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தங்களை மாற்றியமைத்துக் கொள்ளுதல் மற்றும் கடலோர மேலாண்மை நடவடிக்கைகள் போன்ற அனைத்தும் உள்ளடக்கப்பட்டள்ளன.





சுற்றுச்சூழல் மதிப்பீடுகளும் கோட்பாடுகளும் (Environmental Assessments & Principles)

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (Environmental Impact Assessment-EIA):
ஒரு பெரிய திட்டம் தொடங்குவதற்கு முன்பாக மேற்கொள்ளப்படும் விரிவான ஆய்வாகும். இத்திட்டத்தினால் சுற்றுச்சூழல், மீன்பிடித் தொழில், நீர்நிலைகள், காடுகள், கடலோரப் பகுதிகள் அல்லது உள்ளூர் சமூகங்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுமா என்பதை இது விரிவாக ஆராய்கிறது.



சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்க மதிப்பீடு (Environmental Social Impact Assessment-ESIA):
இது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டைப் போன்றதே ஆகும், ஆனால் ஒரு திட்டம் மக்களின் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பிரத்தியேகமாக ஆராய்கிறது. அதாவது, சுற்றுச்சூழல் பாதிப்புகள் மட்டுமின்றி, பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளை இழத்தல், வாழ்வாதாரப் பாதிப்புகள், மக்கள் இடம்பெயர வேண்டிய அபாயங்கள், கலாச்சாரத் தாக்கங்கள், பெண்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பின்தங்கிய சமூகக் குழுக்கள் மீதான பாதிப்புகள், மற்றும் சுகாதாரம்-பாதுகாப்பு சார்ந்த சிக்கல்கள் போன்ற அனைத்தையும் இது விரிவாக ஆய்வு செய்கிறது.

மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடு (Strategic Environmental Assessment-SEA):
இது ஒரு குறிப்பிட்ட திட்டத்தை மட்டும் ஆராயாமல், ஒட்டுமொத்த தேசியத் திட்டங்கள், கொள்கைகள், செயல்திட்டங்கள் அல்லது பெரிய அளவிலான வளர்ச்சி உத்திகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் தாக்கங்களை மிக உயர்ந்த அளவில் ஆராய்கிறது. இது, பல தீங்கு விளைவிக்கும் தனித்தனி திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுவதற்கு முன்பாகவே, ஏற்படக்கூடிய ஒட்டுமொத்தப் பிரச்சினைகளை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிய உதவுகிறது.

ஆரம்பக்கட்ட சுற்றுச்சூழல் சோதனை (Initial Environmental Examination-IEE):

ஒரு திட்டம் தொடங்குவதற்கு முன்பாக மேற்கொள்ளப்படும் ஆரம்பக்கட்ட சுற்றுச்சூழல் ஆய்வாகும். இது வரவிருக்கும் திட்டத்தினால் ஏற்படக்கூடிய சாத்தியமான சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கண்டறிவதற்கும், அத்திட்டத்திற்கு ஒரு முழுமையான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) தேவையா அல்லது அதன் சுற்றுச்சூழல் அபாயங்கள் மிகக் குறைவானவைதானா என்பதைத் தீர்மானிப்பதற்கும் உதவுகிறது.

சூழலியல் பேரழிவு (Ecocide):
இது ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் அமைப்புகளையும் மிகக்கொடூரமான முறையில் அழிப்பதைக் குறிப்பதாகும்; அதாவது, சுற்றுச்சூழல் வலயங்கள் முழுமையாகச் சீர்குலைந்து அழிவதற்கும், அரிய உயிரினங்கள் முற்றிலுமாக அழிவதற்கும், உள்ளூர் சமூகங்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழப்பதற்கும், மற்றும் நீண்ட காலத்திற்கு மீட்டெடுக்க முடியாத அளப்பரிய சேதங்கள் ஏற்படுவதற்கும் காரணமாய் அமையும் மிகக்கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்புகளை இது குறிக்கிறது. இதற்கு உதாரணமாக, கடலில் ஏற்படும் பெருமளவிலான எண்ணெய்க் கசிவுகள், பவளப்பாறைகளை அழித்தல், சட்டவிரோத சுரங்க அகழ்வுகள், நசுஞ்சாக்கம், பெருமளவிலான காடழிப்பு, கண்டல் காடுகளை அழித்தல் மற்றும் மிகக்கடுமையான சமுத்திர மாசுறுதல் போன்றவற்றைச் சுட்டிக்காட்டலாம்.
செயற்பாட்டாளர்களும் சட்ட வல்லுநர்களும் Ecocide (சூழற்கொலை) இனை மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு இணையாக ஒரு சர்வதேசக் குற்றமாக அங்கீகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். இதன் பின்னணியில் உள்ள முதன்மை நோக்கம் என்னவென்றால், பெருமளவிலான சுற்றுச்சூழல் அழிவுக்குக் காரணமான தனிநபர்களும் நிறுவனங்களும் சட்டப்பூர்வமாக அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பதாகும்.

மாசுபடுத்துபவரே இழப்பீடு வழங்கும் கோட்பாடு (Polluters Pay Principle-PPP):
சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் அல்லது சேதப்படுத்தும் தனிநபர்களோ அல்லது நிறுவனங்களோதான் அந்த மாசுகளை அகற்றுவதற்கும், இயற்கைச் சூழலை மீட்டெடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட உள்ளூர் மக்களுக்குத் தகுந்த இழப்பீடு வழங்குவதற்கும் முழுமையான நிதியியல் பொறுப்பை ஏற்க வேண்டும்.

நீலக் கார்பன் (Blue Carbon):
கண்டல் காடுகள், கடற்புற்கள் மற்றும் உவர் சதுப்புநிலங்கள் போன்ற கடலோர நீர்நிலை சுற்றுச்சூழல் அமைப்புகளினால் உறிஞ்சப்பட்டு, அவற்றின் தாவரப் பகுதிகள் மற்றும் மண்ணில் நீண்டகாலமாகச் சேமித்து வைக்கப்படும் கார்பன் ஆகும். இந்த சுற்றுச்சூழல் அமைப்புகள் வளிமண்டலத்திலிருந்து கார்பனைத் தீவிரமாக உறிஞ்சுகின்றன. இத்தகைய கார்பனை உறிஞ்சக்கூடிய சூழல் அமைப்புகள் காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடவும், கடற்கரைகளைப் பாதுகாக்கவும், மீன் வளங்களை ஆதரிக்கவும் மற்றும் வெள்ளப் பாதிப்புகளைக் குறைக்கவும் பெரிதும் உதவுகின்றன.

மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறைகள் (Human Rights-Based Approaches -HRBAs):

மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறைகள்: என்பது சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு சார்ந்த முடிவுகள் அனைத்தும் மனித உரிமைகளை மதிப்பதை உறுதி செய்யும் ஒரு நெறிமுறையாகும். இக்கோட்பாடானது உள்ளூர் மக்களின் பங்களிப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல், பாகுபாடின்மை, சமூகத்தின் சம்மதம் மற்றும் நியாயத்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இயற்கை வளப் பாதுகாப்பு என்ற பெயரில் உள்ளூர் சமூகங்களை அவர்களின் சொந்த நிலங்களை விட்டு வெளியேற்றவோ, அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறவோ, வாழ்வாதாரங்களை அழிக்கவோ அல்லது உள்ளூர் மக்களின் குரல்களை ஒடுக்கவோ கூடாது என்பதை இது வலியுறுத்துகிறது.

















இந்தக் கையேடு, சமூகத்தை மையப்படுத்திய கலந்துரையாடல்களுக்கு ஆதரவளிக்கவும் கடலோரச் சமூகங்களின் குரல்களை வலுப்படுத்தவும் கிரீன்பீஸ் தெற்காசியா (Greenpeace South Asia) அமைப்பினால் உருவாக்கப்பட்டது.

கடற்கரைகள், கடல்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் சமூக உரிமைகள் குறித்து நியாயமான, தெளிவான மற்றும் பங்களிப்புடனான உரையாடல்களை வளர்ப்பதற்கு இந்த வளத்தைப் பயன்படுத்துமாறு உங்களை அன்போடு அழைக்கிறோம்.